கனம் உறுப்பினர் அவர்கள் அந்த ஊர் பெயரைக்கூட தவருகக் குறிப்பிட்டார்கள். அவருக்கு அந்த ஊர் பெயரைச் சொல்லிக் கூடப் பழக்கம் இல்லேபோல் தெரிகிறது. எனக்கு அந்த ஊர் பழக்கமானது. இப்படிப்பட்ட சம்பவங்கள் அசாதாரமான சம்பவங்கள் என்று உறுப்பினர் குறிப்பிட்டார். உள்ளபடியே, சாதாரண சம்பவங்களில், விரும்பத்தகாத சம்பவங்களில் எல்லாம் சர்க்காருடைய சாதாரண நிர்வாகத்தின்கீழ் வரக்கூடியவை களுக்கு சர்க்கார் தக்க நடவடிக்கைகளே மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சம்பவம் அரசினருடைய நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கிறது. ஆகையால் இந்தச் சம்பவம் பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

'The matter must involve more than the ordinary administration of the law'. ஆகவே, 50 (viii) விதியின்கீழ் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ii) அம்பாசமுத்திரம் வட்டத்தில் நெல் கொள்முதல் முறை

திரு. டி. எஸ். ஆதிமூலம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 42-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிக்கை கொடுத்திருக்கிறேன்.

"திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுகாவில் தற்போது நெல் கொள்முதல் செய்யும் முறைபற்றி விவாதிக்க வேண்டும்."

தலைவர் அவர்களே, சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அம்பாசமுத்திரம் தாலூக்காவில் உள்ள விவசாயிகளுக்கு லெவி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 8 தாலூக்காக்களுக்கும் மொத்தமாக 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்து, அதில் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் மட்டும் 9,500 டன் என்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. அம்பாசமுத்திரம் தாலுக்காவில் ஏராளமான அளவில் கொள்முதல் ஆகிக்கொண்டிருக்கையில் மேலும் கொள்முதல் செய்வதற்காக இரண்டாவது தடவையாக லெவி நோட்டீஸ் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விவசாயியையும் கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்ய சர்க்கார் ஏஜெண்டுகளும், அதிகாரிகளும் நடவடிக்கைகளே மேற்கொண்டிருக்கிருர்கள். லெவிக்கு ஒழுங்காக நெல்லே விவசாயிகள் கொடுத்தபோதிலும், மீண்டும் மீண்டும் அவர்களிடத்திலே இருந்து நெல்லே எடுத்துக் கொண்டு போகும்படியான நிலேயில் அதிகாரிகள் கெடுபிடி செய்து வருகிருர்கள். அம்பாசமுத்திரம் பகுதி, சேரன்மாதேவி பகுதி

எல்லாம் இதனால் ஸ்தம்பித்திருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அங்குள்ள துன்பங்களையும், அதிகாரிகளின் கெடுபிடிகளையும் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

(iii) நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"கோவை மாவட்டம் கோபி வட்டம், நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவமழை தவறியதன் காரணமாக தோட்டக்கால் புன்செய்ப் பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டு, அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இழந்துள்ள நிலைபற்றி விவாதிக்க வேண்டும்".

தலைவர் அவர்களே, இந்த நம்பியூர் ஒன்றியம் என்பது பஞ்சப் பிரதேசமாக நோட்டிபிகேஷன் செய்யப்பட்டது. இது அவனாசி, பல்லடம் என்ற இரண்டு தாலுக்காக்களை ஒட்டியது. இவைகளை விட மிக வறட்சியுள்ள பிரதேசம். அங்கே மக்கள் அவதிப்படுவதாகவும், உடனடி நிவாரணம் செய்ய வேண்டுமென்றும் நிலவரி மானியக் கோரிக்கையின்போதும் நான் எடுத்துச் சொன்னேன். ஆனால் அந்த நிவாரணத்தை உடனடியாகச் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நிவாரண வேலைகளைச் செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறார். நம்பியூர் பிர்க்கா விவசாயிகள் சங்கச் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு உருக்கமான கடிதம் வந்திருக்கிறது. அங்கே மக்கள் பட்டினி கிடந்து சாகக்கூடிய நிலைமையில் உள்ளார்கள் என்றும், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தொழிலாளிகள், அரிசனங்கள் ஆகிய எல்லோரும் பட்டினி கிடக்கிறார்கள் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையை இந்த அரசு விரும்பாது என்பது தெரியும். அங்கே வாழும் மனிதர்களுக்கு எல்லாம் அடிப்படையான தேவையாகிய உணவு கிடைக்கும் வகையில் நிவாரணம் செய்ய வேண்டும். அவனாசி, பல்லடம் தாலுக்காக்கள் இதையொட்டியிருப்பதால், இவைகளை பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவித்திருப்பதுபோல் இந்தப் பகுதியையும் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, உடனடியான நிவாரணங்களைச் செய்ய அரசு முன்வரவேண்டும். இதில் நிர்வாக இடைஞ்சல்கள் இருந்தாலும் நிவர்த்திக்க அதற்கு தக்க